# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுரும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம் ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 7] திருச்சி 15—7—68 [ தனிப் பிரதி 25 காசு

# தமிழ்த்தாய் வருக!

[ ரெட்டியார் ]

★

தான் தனியாய் நின்றிந்த தரணிவாழ்வின்
சத்தியத்தை தெளிந்துரைக்கும் தமிழே அன்னாய்!
வான்நிறைந்த பேரொளியை தன்சொல்லால் பெற்று
வற்றுத சுரநதிபோல் வளங்கள் நல்கி
கூன் உள்ளம் படைத்தவர்கள் கோணல் தீர்த்து
கொஞ்சுதமிழ் சொல்கொண்டு இறையைக் காட்டும்
தேன்தமிழே! தென்மறையே! தேவர் உண்ணும்
தெள்ளமுதே! தொன்மைமிகு தமிழே வாராய்!

உந்திக் குளத்தில் பொற்றுமரை உணர்வில்
உவந்தே முகிழ்த்த ஒளி அமுதே
உடலில் ஐந்து திணைநில மாயுயர்
சக்கரம் ஆறும் அறிவாக
சிந்தை நிறைஜ தேவருமாய்
சேர்ந்த நான்குயுகப் பிரிவில்
சித்தசக்தியே தமிழ்பாட வெளி
சித்தம்பலத்தான் கூத்தாட

விந்து திரியாய் விளக்கெரிக்க ஆவி
மேவி இயக்கி அமுதூறி நிற்க
பந்தம் சூரிய சந்திரர்கள் உடலில்
பாய்ந்து அசைந்து சுழன்ருட
எந்தாய் தமிழே விசுத்தியில் நின்று
இன்குரல் கொண்டு தமிழிசைக்க
சிந்தைக் கொலுவில் செந்தமிழ் வாணி
திருவடி வைக்க எழுந்தருள்வாய்.

செந்தமிழ் அன்னையே சிந்தை குடிகொண்ட
தெய்வமே அமுத ஊற்றே
சிரகமல உச்சியில் சகஸ்த்ரதள மேவிடும்
சிவனுர் உவந்த தேனே
முந்துற்ற திருமாலும் முருகனும் களிகொள்ளும்
முத்தமிழின் புத்தமுதமே
முத்தீயின் ஆட்சிக்குட்பட்ட வுடற்கூட்டில்
முத்தாடும் ஒளி ரத்னமே

சிந்தையால் உலகினை அளந்தறிந்தே மகிழ்
சித்தகர் காத்த முத்தே
சிற்றணுக் கூட்டமே சேர்ந்த பிரபஞ்சமும்
தேகமும் என அறிந்தோர்
கொந்துற்ற சிந்தையிற் கவிதைப் பிரவாகமாய்
குலவு தமிழ்த்தாய் வருகவே!
குவலயம் காணுத சிந்தனை படைத்த செழுங்
குமரித் தமிழ்த்தாய் வருகவே!

காலத்தை வென்றவள் கன்னியென நிற்பவள்
கல்தோன்றி மண்தோன்ருக் காலமுதலாய்
காசினிக் கொழுக்கமும் ஞானமும் புகட்டிவரும்
கருணை நிறைத் தமிழ்த் தெய்வமே
மூலப் படைப்பென்னக் காலக் கணக்கர்கள்
முறைமுறை தொகுத்துரைக்கும்
மூதாட்டி செந்தமிழ்ச் செல்வியே! அகம்புறம்
முற்றும் அறிந்த மேலோர்

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 9. முத்துக்குமார் புலவர்

—[கி. முத்துராமகிருஷ்ணன்]—

★

எட்டயபுரம் மன்னர் சபையில் புலவர்கள் புரவலர்கள் அறிஞர்கள் பலர் கூடி விவாதிப்பர் தமிழ் பற்றி. அரச அவையில் வழக்கமாக கடிகை முத்துப்புலவர் நாகூர் முத்துப்புலவர் இருப்பது வழக்கம். பின்பு முத்துக்குமார் புலவர் என்ற கவிஞர் இடம் பெற்றார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். கவி புனைவதில் வல்லவர். வாதுக்கு வந்தவரை மடக்குவதில் மகாதீரர்.

தமிழ்ச் சர்ச்சைகள் நடைபெறும் சமயங்களில் எல்லாமே அரசரும் உடன் வீற்றிருந்து பங்குகொள்வது என்பது வழக்கம்.

ஒரு நாள் கவிஞர்கள் வழக்கம் போல் கூடிவிட்டனர். யாவருமே தத்தமது ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். உடையவர், உரிமையாளர், அரசர் மட்டுமே உரிய காலத்தில் வரவில்லை. வராத காரணம் கடிகையாருக்கு மட்டும் தெரியும். மன்னரின் பிறந்த நாள் நாளை வருவதற்கு அன்று என்னென்ன செய்யவேண்டும் என்ற யோசனைகளைத் தெரிவித்துவிட்டு மன்னர் வருகிறார். யாவருடனும் சிறிது பேசியபின் சபை கலைகிறது.

அதுசமயம் சபைக் காவலன் சோலைஅழகன் வருகிறான். 'மன்னர் மன்னவா, தங்களைக் காண திருமலைக்கொழுந்து கவிராயர் வந்திருக்கிறார். அழைத்து வரலாமா?' என்று வினயமாகக் கேட்கிறான்.

இதுவரை நான் மன்னன் யார் என்று கூறாமலே எழுதுகிறேன். அவர் ஆளுக்கு அழகன், வல்லவன், வீரன், தீரன் என்று பேரும் புகழும் பெற்ற வெங்கடேசுர மன்னன். வேலையாளிடம் கட்டளை இடுகிறார். இன்று சபை கலைந்து விட்டது. நம்மைப் பார்க்க நாளை வரச்சொல் என்று கூறினார். மன்றம் கலைந்தது. மன்னரும் புலவரும் தம் தமது இருப்பிடம் திரும்பினர்.

சோலை அழகன் திரும்பி வந்து கவிராயரிடம் மன்னர் கூறிய மறுமொழியைக் கூறினார். கவிராயருக்குக் கடுங்கோபம். தன்னை வேண்டுமென்றே இங்குள்ள புலவர்கள் புறக்கணித்துவிட்டார்கள், அவர்களுக்கு தான் புத்தி புகட்ட வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. எனவே தன் எண்ணத்தை கவியாக பாடிவிட்டார்.

கம்பனைவிட காளி, ஒட்டக்கூத்தனை விட தானே பெரிய வம்பன் கொம்பன் என்று பாடினார்.

கம்பனென்றும் வம்பனென்றும் காளி ஒட்டக்
கூத்தன் என்றும்
கும்பனென்றும் பேர் படைத்துக் கொள்வானே
—அம்புவியில்
இந்நாளிலே இருந்த ஏழை திருமலைக்கொழுந்து
அந்நாளிலே இருந்தக் கால்.

இப்பாட்டு கடிகையார் கையில் சிக்கியது. உடன் அவர் முத்துக்குமார் புலவரை அழைத்துக் கொண்டு மன்னரிடம் சென்று மறு அரச சபையில் திருமலைக்கொழுந்துவை முத்துக்குமாரே வாக்குவாதம் செய்யட்டும் என்று முடிவு செய்து திரும்பினார்கள்.

மறுநாள் மன்னரின் பிறந்தநாள். சிறப்பான கொண்டாட்டம். ஏழைகளுக்கு அன்னம், புதிய உடை வழங்கினர். கச்சேரி, சதிர்ஆட்டம் நிறைவேறின. இரவு ஊர்வலம் வாணவேடிக்கை நிகழ உள்ளன.

மன்னர் அவர்கள் பல்லக்கில் ஏறி பவனி வருகிறார். மன்னரின் இருமருங்கிலும் கடிகையாரும் முத்துக்குமார் புலவரும் வருகிறார்கள். முன்னால் நாகூர் முத்துப் புலவர் அவர்கள் செல்கிறார்கள். ஊர்வலம் முதலாவது அரண்மனையை விட்டு மேற்காகச் சென்று மேலரத வீதியில் வருகிறது. அங்கு வடக்கு ரத வீதியில் திரும்பும் சமயம் அங்குள்ள மூலையில் வாணவேடிக்கை நடைபெறுகிறது. இதனைக் கவனித்துக்கொண்டு வருகிறார் திருமலைக்கொழுந்து கவிராயர். வருகின்ற புலவர்களை நாம் எப்படியும் மடக்கி மட்டந்தட்ட வேண்டும் என்ற எண்ணம் உள்ளத்தில் உந்தப்பட்டு வருகிறது.

வாணவேடிக்கை நடைபெறுகிறது மன்னரும் மக்களும் கண்டு மனம் மகிழ்கிறார்கள். வாணவேடிக்கையின் தன்மையை புலவர்கள் பாடிக் காட்டவேண்டும் என்ற முறை ஒன்று உண்டு. இதனையும் திருமலைக்கொழுந்து அங்கு வந்து அறிந்துகொண்டிருக்கிறார். எனவே மன்னர் அவர்கள் வாணவேடிக்கை முடிந்ததும் முத்துக்குமார் புலவர் பாடுவார் என்று எண்ணி அவர் முகம் நோக்குகிறார். அங்கு திடீரெனத் தோன்றுகிறார் புலவர் திருமலைகொழுந்து. வந்து ஒரு கவிதையைப் பாடுகிறார்.

புலவர் திகைப்பதாகவும் அவர் எண்ணிக்கொண்டு வாணவேடிக்கையைப் பற்றிப் பாடுகிறார்.

எத்திக்கும் போற்றும் இளசை வெங்கடேசுர
எட்டன்
முத்துக்குமார் முகம் நோக்கி—துத்தியமாய்
வாணத்தைப் பார் என்றார் மாச்சலேன்
அண்டம்ஓர்
கோணம் இடிந்தது எனக் கூறு.

இதில்தான் கவிராயர் கோட்டை விட்டுவிட்டார். பிறரை மட்டந்தட்ட எண்ணிய கவிராயர், புலவரால் மட்டந்தட்டப்படுகிறார். நீ நாவலன்; ஏனோ அவசரப்பட்டு விட்டாய். நான சொல்கிறேன் கேள் என்றார். புலவரின் பாடல் மன்னரைக் காண இந்திரனே வந்துபூமாரி பொழிந்தனன் என்று கச்சிதமாக அமைகிறது.

கோணம் இடிந்ததெனக் கூறில் அது
குறை அன்றோ
நாணமின்றிச் சொன்னால் நீ நாவலனோ —
வாணமது
எங்கோன் பவனிகண்டு இந்திரனும் வந்திறங்க
அங்கே பூமாரி பெய்தனன்.

இதனைச் சற்றும் எதிர்பாராத திருமலைக்கொழுந்து திரும்பிப் பார்த்தார். முத்துக்குமார் புலவர் நின்றுகொண்டிருக்கிறார். தன்னை மடக்கிப் பாடியதைக் கேட்டார். மனதை மாற்றிக்கொண்டார். முத்து என்னை மன்னித்துவிடு. நான் முறைதவறிவிட்டேன்; உங்களை நான் தவறாக எண்ணிவிட்டேன் என்று வருந்தினார்.

மன்னரும் பிற புலவர்களும் இதைக்கண்டு ரசித்தனர். அதனால் நமக்கு இரண்டு பாடல்கள் கிடைத்தன. மன்னர் பவனி முடிந்த பின்பு மறுநாள் அரசசபை கூடியது. கவிராயர் திருமலைக்கொழுந்து வந்தார். மன்னர், பிறபுலவர்களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்றார். தமிழ் வளர்த்த மன்னர் திருமலைக் கொழுந்துக்கு தக்க சன்மானம் தந்து அனுப்பி வைத்தார்கள்.

# எழுத்தாளன்

கனவு 11]  கீலக, ஆடி (15-7-68)  [கற்பனை 7


## தவம்

உயிர் தத்துவம் ஒலிவடிவாகி உடலை இயக்கும் சூட்சுமம் ஆக இருக்கிறது. உடலில் அடங்கிய ஒலி அமர ஜோதியாக அமைய சிறந்த கொள்கைகளும் பரபரப்பற்ற சிந்தனைகளும் உதவுகின்றன, உள்ளத்தில் உள்ளான் இறைவன் என்று சொல்வதின் பொருள் இறைவன் வதிகின்ற இடம் தூய்மையே வடிவானது என்பதால் உள்ளத்தில் தூய்மையை நிலைநிறுத்துவதே மனித வாழ்க்கையின் பயனாகும். பிறருக்குத் தீங்கு நினையாத உள்ளத்தில் எவ்வித வேண்டுதலும் இன்றி இறைவடிவாகிய ஒலி சுடர் விட்டு பிரகாசிக்கும். ‘‘மாசற்றக் கொள்கையை மனத்தில் அடைத்தக்கால் ஈசனைக் காட்டும் உடம்பு’’ என்று தமிழ்ப் பெருமாட்டி ஔவை தெளிவாகக் கூறுகிறாள். மனித வாழ்க்கையின் குறிக்கோள் இன்னது என்பதை தெளிவாகக் கூறவந்த பாரதி ‘‘வையத்தில் அன்னை பராசக்தி தந்த வன்மையெலாம் ஐயத்திலும், துரிதத்திலும் சிந்தி அழிவதென்னே ! பையத்தொழில் செய் நெஞ்சே, கணபதிபன் பக்தி கொண்டே’’ என்று வருத்தப்படுகின்றார்.

பரபரப்பும், ஆத்திரமும் இல்லாமல் சிந்தனைகளையும் செயல்களையும் எண்ணிச் செயல் புரிவது ஒன்றுதான் வாழ்க்கையில் தவம்.

தவம் என்ற மூன்று எழுத்துக்களில் இத்தனையும் அடங்கியிருக்கிறது. தனிமையை நாடி குகைக்குள்ளும் புதருக்குள்ளும் மோனநிலையில் வீற்றிருந்த ஞான குருமார்கள் இதைத்தான் கண்டார்கள்.

தமிழ் எழுத்தாளர்கள் தங்கள் எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் இந்த அடிப்படைக் கருத்தை உள்வைத்து கதைகளாகவும், கட்டுரைகளாகவும், கவிதைகளாகவும் சித்திரங்கள் தீட்டுகிறார்கள். நாளை இருப்போமா என்று சிந்திக்கத் தெரிந்த மனிதன் இன்றைய வாழ்வில் பரபரப்படையமாட்டான். பிறர்மீது கொள்ளும் கோப உணர்ச்சி தன்னையே பாதிக்கிறது என்று அறிந்தவன் கோபம் கொள்ளமாட்டான். மற்ற எல்லா உணர்ச்சிகளுக்கும் தீயதாக கொடியதாக இருக்கும் உணர்ச்சி கோபம். கோபம் கொள்வது தற்கொலை செய்துகொள்வதற்குச் சமம். சிலர் கோபத்தாலேயே தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்பதை தினசரி காண்கிறோம்.

நாம் கொல்லவேண்டிய உணர்ச்சி கோபம் ஒன்றுதான். கோபத்தைக் கொல்பவன் தைரியசாலி. கோபத்தைக் கொள்பவன் கோழை. கோபத்தைக் கொல்வதே பிற உணர்ச்சிகளை கொள்வதற்கு வழி என்று தெளிவுபடுத்துகிறார் பாரதி.

வாழ்க்கை வளமாக வாழ்வதற்கு உள்ளமாகிய கோவிலைத் தூய்மையாக வைத்திருப்பதே தவம். இந்த தவமானது ஆடிப்பெருக்கைப் போல எல்லாத் தமிழ் மக்களுடைய உள்ளங்களிலும் பெருக்கெடுக்க வேண்டும் என்பதே எழுத்தாளனின் பிரார்த்தனை.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

## பிரசன்னம் - பிரேமா திருமணம்

எனது இரண்டாவது குமாரன் செல்வன் பிரசன்னத்திற்கும் - செல்வி பிரேமாவதிக்கும் 14—7—68ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்னை அகிலாண்டேசுவரி கொலுவமர்ந்திருக்கும் திருவானைக்காவலில், ஆறுநாட்டு வேளாளர் சத்திரத்தில் திருமணம் நடைபெற்றது. சங்க இலக்கிய கால திருமணத்தைப் போன்று இத் திருமணத்தின் அடிப்படை அமைந்திருந்ததால், சுற்றமும் நட்பும், சூழ வருகை தந்து அதி ஆவலோடு, உற்சாகத்தோடு திருமணத்தை நடத்தித் தந்தார்கள்.

திருமணத்திற்கு வருகை தந்து சிறப்பித்த பெருமக்களுக்கும், தங்கள் வீட்டுத் திருமணத்தைப் போன்று மிக மிக உற்சாகத்தோடு தோள் கொடுத்து உதவி என்னில் இணைந்த என் உயிரனைய நண்பர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றி.

எழுத்தாளர்கள் சார்பில் நடைபெற்ற வாழ்த்துரை விழாவிற்கு தலைமை வகித்து மணமக்களை வாழ்த்திய திருவானைக்காவல் திருப்பணிக் கமிட்டித் தலைவரும் எங்கள் குடும்பத்து மூத்தவருமான திரு. T. M. நாராயணசாமி பிள்ளை அவர்களுக்குத் தலைதாழ்த்தி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணமக்களை உளம்குளிர பாராட்டிய பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றியும் வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சந்தர்ப்ப வசத்தால் திருமணத்திற்கு வரமுடியாத காரணத்தால் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைத்த நண்பர்களுக்கும், திருக்கோவில் பிரசாதங்களை அனுப்பி மணமக்களை தங்கள் நல்லுரைகளால் வாழ்த்திய பெருமக்கள் அனைவருக்கும் என் உளம்கனிந்த நன்றியை உரிமையாக்குகிறேன்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

# ★ ஜீவ காந்தா ★

—[எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு]—

## முதல் அத்தியாயம்.

### காலம் செய்யும் கோலம்

''நாதா நாமிருவரும் நலமுஞ் சுகமு மெய்திச்
சீதையி ராமன் போலுஞ் சிவனுமுமையும்
[போலும்
ராதா கிருஷ்ணன் போலுஞ்ரதி யும் மதனும்
[போலும்
பாதார விந்தஞ் சேர்தல் பாவி யடைத
[லென்றே?''

"பணமா வேண்டுமென்று கேட்கிருய்? உங்கள் அப்பன் வீட்டுப் பணம் கொட்டிக்கிடக்கிறதா? கொல்லையிலே பணச்செடி காய்க்குதா? எவன் பணத்திலிருந்து நீ எனக்கு அள்ளிக் கொடுத்துவிட்டாய்? நீ எனக்குத் தந்தது என் அண்ணுவின் பணம்தானே? தானுகக் கொடுத்தால் ஒருவேளை வராமற் போய்விடுமென்று உன் மூலமாக என் அண்ணு எனக்குக் கொடுத்த சங்கதி. பின்னே என்னடா? உன் சொந்தத்திலிருந்து வாரி வீசிவிட்டயா? ஒரே அடியில் துள்ளி விழாதே — கிராமத்தான் சங்கதி தெரியுமா? நடுவழியிலேயே கால் தலை துண்டமாகிவிடுமே? ஏண்டா சுடச் சுட அப்பளம் வேணுமாடா? அடே யாரடா அங்கே? இந்த ஐயாவுக்குக் கொஞ்சம் சூடு காட்டிவை. பிடித்து அந்த மரத்திலே கட்டி ஒரு குடம் சாணித் தண்ணியைத் தலையிலே ஊற்று. ஐயாவின் மூஞ்சியிலுள்ள மீசையை ஒரு பக்கம் க்ஷவரம்பண்ணு. உடனே வேலை நடக்கட்டும்.'' என்று மாதவ நாயுடு வெகு கோபமாய் வேணுகோபால் நாயுடுவைப் பார்த்தபடி தன் வேலையாட்களுக்கு உத்தரவு செய்தார். உடனே ஒரு பத்து பேர் வேணுகோபாலரைப் பிடிக்க நெருங்கினர். வேணுகோபாலர் ஜேபிலிருந்து கைத்துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தைப் பார்த்து இரண்டு வெடி தீர்த்து, எவனுவது அருகில் வந்தால் நாயைச் சுடுவது போல் சுட்டு வீழ்த்துவேன் என்று சொல்ல, வேலைக்காரர் துப்பாக்கிக்கு முன்போக அஞ்சி நிற்கவே, அவர் துப்பாக்கியைக் காட்டியபடியே ஐயம்பேட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து, அப்போது புறப்பட்ட வண்டியில் ஏறிக்கொண்டார். இரவு பத்து மணிக்குத் திரிச்சிஞப்பள்ளி சேர்ந்து கடைவீதி வழியாய் வருகையில், அந்த நேரத்திலுங்கூடத் தமது கடை மூடாமல் திறந்து கிடப்பதைகண்டு, வேறு வழியாக ரகசியமாய் உள்ளே வந்து, தமது கடை குமாஸ்தாவும், மாதவநாயுடுவின் குமாரன் சீதாபதியுமாக கடையின் கணக்கு புஸ்தகங்களைத் திருட்டுத்தனமாய் திருத்திக் கொண்டிருப்பதைக்கண்டு சந்தடி செய்யாமல் வெளியே சென்று, ஐந்து வியாபாரிகளைத் தருவித்து காட்டி பஞ்சாயத்து வைத்து அவர்களின் முன்னே கணக்கு புஸ்தகங்களை மோசடியாய்த் திருத்தியதைப் பற்றி இருவரிடமும் எழுதி வாங்கி பஞ்சாயத்தாரின் சாக்ஷி கையெழுத்துகளும் பெற்றுக்கொண்டார்.

சீதாபதியும் கடைக் குமாஸ்தாவும் சிங்கக் குகையிலிருந்து தப்பியவர்கள் போல் வெளியே வந்து, அந்த இராத்திரி வண்டியிலேயே ஏறி ஐயம்பேட்டை சென்று மாதவநாயுடுவிடம் எல்லா சங்கதிகளையும் சொல்லவே, அவர் வேணுகோபால் நாயுடு கட்டாயம் போலீசுக்குப் போவாரென்றும் அதனுல் விபரீதம் ஏற்படுமென்றும் எண்ணி, உடனே நாகப்பட்டணத்திற்குப் போய் தமது தமையனுரான கேசவலு நாயுடுவின் பாதங்களில் விழுந்து அலறியழுது தன்னை பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சினுர்.

கேசவலு நாயுடு:—மாதவா? ஏன் இப்படிக் கதறுகிருய்? நடந்த சங்கதி என்ன?

மாதவன்:— ஐயோ! அந்த வேணுகோபாலர் ஒரு குளிர்ந்த கொள்ளி! வாயிலே சிரிப்பும் வயிற்றிலே வஞ்சனைக் கத்தியும் அவருக்கு வழக்கமாகிவிட்டது. ஐயோ! அந்தப் பாவியிடம் அகப்பட்டுக்கொண்டு என்ன தவிப்பு தவிக்கிறேனண்ணு! என் குடும்பத்து மானமே அந்தப் பயங்கர மனிதனுல் தொலைந்துவிடும் போலிருக்கிறதே! அவ்வளவு பெரிய ஆபத்து அண்ணு! என்னைக் காப்பாற்று அண்ணு!

கேசவலு நாயுடு:— வேணுவைக் கண்டிப்பானவன் என்று மட்டும் சொல்லு. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். என்னைவிட அவன் எவ்வளவோ குணசாலியாயிற்றே. சத்தியவந்தனை அவனை நீ கண்டபடி தூஷிப்பது தப்பு. அவனிடம் நீ வாங்கிய நாலாயிரம் ரூபாய் கடனில் மாதா மாதம் வட்டியும், முதலில் மாதம் ரு 100ம் தருவதாய்ச் சொன்ன நீ 2 வருஷங்களாகியும் வட்டியிலாவது முதலிலாவது ஒரு பைசாகூட தராததற்காக ஏதாவது வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருக்கலாம். அவ்வளவு தானே சங்கதி? இதற்காகவா இப்படிக் கதறுகிருய்?

மாதவன்:— அவ்வளவோடு போகவில்லையண்ணு! எனக்கு வக்கீல் நோட்டீஸ் கொடுத்தது மட்டுமல்ல, என் குமாரன் சீதாபதியும் தனது கடைக் குமாஸ்தாவும் சேர்ந்து கணக்குகளைத் திருத்தி மோசடி செய்ததாகக் குற்றங்கள் ஏற்படுத்தி போலீஸாரைக்கொண்டு கைது செய்யப் போகிருராம். என்ன செய்வேன் அண்ணு! குழந்தை போலீஸ் கொட்டடி போகலாமா?

கேசவலு நாயுடு:— சீதாபதி கைது செய்யப்படுவது அவமானம்தான்! போலீஸார் காரணமில்லாமல் எதிலும் பிரவேசிக்கமாட்டார்களே!

மாதவன்:—எதற்கும் நீங்கள் இப்பொழுதே திரிச்சிஞப்பள்ளிக்குப் புறப்பட வேண்டுமண்ணு! காப்பாற்ற வேனும் அண்ணு! வேறு திக்குதிசையில்லையண்ணு! என்று சொல்லி அண்ணுவின் கால்களில் விழுந்து பிரலாபித்தான். கேசவலு நாயுடு நாகப்பட்டணத்தில் ரயிலே தலைமைக் காஷ்கீப்பராக நானூறு ரூபாய் சம்பளத்தில் இருந்துவந்தார். மகா தீனதயாளு. சாத்மீக சம்பன்னர். மஹா கம்பீரமுமான மனிதர். புராதன காலத்தில் செல்வவான்கள் விருந்தாளி ஒருவராவது இல்லாமல் போஜனம் செய்யமாட்டார்கள். அதைப் போலவே கேசவலு நாயுடு புசிக்கும்போது அவருடன் பத்துபேராவது அன்னியர்கள் தினமும் உட்கார்ந்து உண்பார்கள். இப்படிப்பட்ட தர்மமூர்த்தி தமது பிரியமான தம்பி புத்திரனுக்கு நேரிடக் கூடிய ஆபத்தைக் கேட்டு உடனே மாதவருடன் திரிச்சிஞப்பள்ளிக்குப் புறப்பட்டுவந்து, தமது தங்கையான இராமானுஜம்மாளையும், அவளுடைய பர்த்தாவான வேணுகோபாலரையும் கண்டு நடந்த சங்கதிகள் என்னவென்று கேட்டார்.

வேணுகோபாலர்:— மைத்துனரே! உங்கள் மாற்ருந்தாயின் திருக்குமாரரான

மாதவருக்காகச் சிபாரிசு பேச வந்தீர்களாக்கும்! அந்தப்படுபாவி செய்த மோசங்களைக் கேட்டுவிட்டு பிறகு பேசுங்கள். ஐயம்பேட்டைக்கு உடனே புறப்பட்டு வந்தால் வட்டியும் முதலுமாகக் கொடுத்து பைசல் செய்துவிடுவதாக மாதவனிடமிருந்து எனக்கு ஒருதந்தி வந்தது. உடனே நான் ஐயம்பேட்டைக்குப் போனேன். எனக்குப் பலத்த விருந்துகள் செய்து இதோ அதோ பணம் வந்துவிடுமென்று ஏமாற்றிக் கொண்டிருந்தான். நான் கோபித்து உடனே கொடுக்காவிடில் கோர்ட்டில் போடுவேன் என்றதற்கு என்னை மரத்திலேகட்டி சாணித் தண்ணீரை என் தலையில் கொட்டும்படி அவன் ஆட்களுக்கு உத்தரவு செய்தான். அவர்களும் அவ்வாறே என்னைப் பிடிக்கவும் நெருங்கினர். நான் தயாராய் வைத்திருந்த கைத்துப்பாக்கியைக் கொண்டு அவர்களை ஓடச் செய்து தப்பினேன்.

என்று எல்லாவற்றையும் கூறி, பஞ்சாயத்தாரின் முன்பு சீதாபதியிடமும் குமாஸ்தாவிடமும் எழுதி வாங்கிய விவரங்களையும் தெரிவித்தார்.

கேசவலு நாயுடு:— அந்த மட்டில் போலீஸாரிடம் பிடித்து தராமல் பஞ்சாயத்தாரின் முன்பாக சங்கதியை முடித்தாயே. போனது போகட்டும். நடந்ததை மறந்து சமாதானமாய் முடித்துவிடு.

வேணுகோபாலர்:— சமாதானம் என்பது முடியாத காரியம். மாதவன், சீதாபதி, குமாஸ்தா இம்மூவரையும் மாஜிஸ்டிரேட் முன் நிறுத்தியே தீருவேன்.

கேசவலு நாயுடு:—வீணாகப் பிடிவாதம் செய்யாதே. இதுவரை எவ்வளவோ மாதவனுக்குக் கொடுத்தாயிற்று. அத்துடன் இந்தத் தொகையும் தொலையட்டும்.

வேணுகோபாலர்:—இப்படிப் பணத்தை விட்டுக்கொடுத்துவிடுகிற சங்கதிக்கு என் மூலமாகக் கொடுப்பானேன்? அப்படிக் கொடுக்க வைத்து எங்கள் இருவருக்கும் விரோதமுண்டாக்கி வைத்துவிட்டு நீங்கள் மட்டும் நல்ல மனிதராகி விடுகிறீர்களா?

கேசவலு நாயுடு:—இவ்வளவு கோபப்படாதே. என்வார்த்தைக்குக் கொஞ்சம் மதிப்புகொடு.

வேணுகோபாலர்:—நான் ஒவ்வொருவருடைய சங்கதியையும் என் மனதிலே வைத்து ஆழம் பார்க்கிறவன். அவன் வாழ்கிறானா — நான் வாழ்கிறேனா தெரியவேண்டும். நான் நல்லவனுக்கு நல்லவன்; கெட்டவனுக்குக் கெட்டவன்.

கேசவலு நாயுடு:—வேணு! கொஞ்சம் நிதானி. என் மானத்தைக் காப்பாற்று. மாதவனும் சீதாபதியும் தண்டனையடைந்தால் அதனால் என் குடும்பத்திற்கு எவ்வளவு அவமானம் என்பதை யோசி. என் சகோதரன் ஜெயிலுக்குப் போனாலென்ன? —நான் போனாலென்ன?— இரண்டும் ஒன்றுதானே. இதனால் என்கீர்த்தி கெட்டு கேவலமாகி விடாதோ?

வேணுகோபாலர்:— உங்களின் பணத்தை அவனிடமிருந்து வாங்கத்தானே இவ்வளவு பாடுபட்டேன். அதை நீங்கள் கவனிக்கவில்லையே! உங்களின் பண வசூலுக்காக உழைத்ததை என் தகப்பனாருக்காவது மற்றவர்களுக்காவது உழைத்திருந்தால் எவ்வளவோ சந்தோஷப்பட்டிருப்பார்கள்.

கேசவலு நாயுடு:— நீ உழைத்ததை நான் இல்லையென்கிறேனா? மாதவனும் சீதாபதியும் ஜெயிலுக்குப் போகாதிருப்பதற்கே கெஞ்சுகிறேன். பஞ்சாயத்தார் முன்பாக எழுதிய வாக்குமூலத்தையும், மாதவன் எழுதிய கடிதத்தையும் கிழித்து நெருப்பில் போட்டுவிடு. நான் சொன்னபடி செய் என்றார்.

வேணுகோபாலர் மிகுந்த கோபத்துடன் அவைகளை எடுத்து கேசவரிடம் கொடுத்துவிட்டு வெளியே சென்றுவிட்டார். வேணுகோபாலரின் கோபம் சற்று தணிந்த பின் சமாதானம் செய்வது நலமென நினைத்து கேசவலு நாயுடு சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் கேசவர் சமாதானப்படுத்தினார்.

வேணு:—உங்கள் குமாரன் ஜீவானந்தம் நன்றாய் படிக்கிறானா? போன வருஷம் எங்கள் வீட்டில் நடந்த பொம்மைக் கலியாணத்துக்கு அவன் வந்ததற்குப் பிறகு வரவேயில்லை.

கேசவலு நாயுடு:— ஆமாம். சென்னையில் படிக்க அனுப்பிவிட்டேன். மிகவும் சிரத்தையாய் வாசித்து வருகிறான். அவனுக்கு டாக்டராக வேண்டுமென்ற விருப்பம் அதிகமாக இருக்கிறது.

வேணு:—அப்படியே ஜீவா பெரிய டாக்டராகிப் பேரும் பிரக்யாதியும் பெறுவது நிச்சயம். அதோ பல்லி சொல்வதைக் கேட்டீர்களா? என் வார்த்தை அவசியம் பலிக்கும். அவன் மீது எனக்கு உயிர் என்றார்.

அன்று மாலையில் கேசவர் நாகப்பட்டணத்துக்குப் புறப்பட்டுச் சென்றார். மாதவனும் அவருடன்புறப்பட்டு ரயில் ஏறும்போது வேணுகோபாலருக்குப் பிரயாணம் சொல்லிக்கொள்ள அவரும் அரை மனதாய்— "நாலாயிரம் ரூபாயும் அதன் வட்டியும் ஜீரணமாய் விட்டதா? — போய்வா!—போய்வா" என்றார். ரயிலும் அசைந்து கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது.

வரவர வேணுகோபாலருக்கு நல்ல காலமில்லை வியாபாரத்தில் கனத்த நஷ்டம் நேர்ந்துவிட்டது. கடைசியில் கடையை மூடிவிட்டுத் தமது மனைவி பெண்ணுடன் பினாங்குக்குப் புறப்பட்டுச் சென்றார். கேசவலு நாயுடு அவரைப் போகக்கூடாதென்று எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை.

பினாங்குக்குப் போனபிறகு அங்கு புதிதாய் வியாபாரம் செய்யத் தொடங்கி நடத்திவந்ததில். அங்கும் நஷ்டமே ஏற்பட்டுவிட்டதென்று கடிதம் வந்தது. அதற்குப் பிறகு அவரிடமிருந்து கடிதங்கள் ஒன்றுமே வரவில்லை தன் தகப்பனாருக்குத் தெரியாமல் கப்பல் ஏறி ஓடிவிட்ட சீதாபதி இரண்டு வருஷங்கள் போல அலைந்து கெட்டுத் திரும்பிவந்து, தான் பினாங்கில் வேணுகோபாலரைக் காணவேயில்லையென்றும், அவர் பெரிய நஷ்டப்பட்டு எங்கேயோ போய்விட்டாரென்று கேள்விப்பட்டதாயும் சொன்னான். இதைத் தவிர வேறு சமாசாரமோ, அவர் இருக்கும் இடமோ ஏதும் தெரியவில்லை. பல வருடங்களும் ஆகி விட்டன.

(தொடரும்)


## "எழுத்தாளன்"

(மாத இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.

விபரங்களுக்கு: நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு.
திருச்சி-2,

# திருவாசக மொழிபெயர்ப்பு

—[ வி. ஜி. சீனிவாசன் ]—

★

'கடவுள் வாழ்த்து' அதிகாரத்திலே பத்தாவது திருக்குறட் பாவென விளங்கும்,

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்

என்பதனை ஆங்கிலத்தில்,

Of those who swim in the wide
[extended sea,
Of mortal birth, none ever can
[escape,
But they who to the feet of
[God adhere

எனமொழிபெயர்த்துள்ளார் திரு எஃப். டபிள்யூ. எல்லிஸ் (F. W. Ellis) என்பார். இவ்வருங் குறளுக்கு விளக்கவுரை எழுதப்புகுந்த எல்லிஸ் திருவாசகத்திலிருந்து நான்கு பாடல்களை மேற்கோளாகக் காட்டி, அவற்றை நல்ல ஆங்கில மொழியிலும் சிறப்பாகப் பெயர்த்துள்ளார். மணிவாசகப் பாடல்களையும் அவற்றின் ஆங்கிலப் பெயர்ப்பினையும் பார்ப்போம்.

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபுரை மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்து நின்றதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

O Lord! O my Father! even mine who am the slave of those who love thee! thou art the light of truth which pervadeth my body and my soul, which melteth my heart and dispelleth the darkness of falsehood.

Thou art a placid sea of honey agitated by no wave, O Siven of Tiruperundurei!

Thou who art pure intelligence requiring the aid neither of speech nor thought, O teach me the way in which I should speak of thee!

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தா
ருணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிய வெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ யொளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே நின்னைக்
குறுகினோர்க் கினியென்ன குறையே.

Thou art not fully comprehended even by the contemplative sages, the gods or any order of beings;

Thou art the spirit which pervadeth all spirits; thou art the sure remedy against repeated births;

Thou art the pure light which shineth in the midst of expanded darkness, O Siven of Tiruperundurei!

Thou art unqualified happiness,—what more can they require who are united to thee?

குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய்
[வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெரு நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் னுடலிடங் கொண்டா
யினியுன்னை யென்னிரக் கேனே.

Thou art the full weight without diminution, thou art unadulterated nectar, thou art a hill of unextinguishable eternal light.

Thou comest in the words and in the sense of the scriptures and art for ever fixed in my mind.

Like undammed water thou flowest into my thoughts, O Siven of Tiruperundurei!

O Lord thou hast taken thy abode within me,—what more can I ask?

இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தனே னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

O Sun arisen in my mind that by continual solicitation I may appropriate thee!

Thou art he whose lotus-feet are placed on the heads of the Gods, O Siven of Tiruperundurei!

The expanded ether, water, earth, fire and air, these thou art not,

But without form art hidden among them; I rejoice that I have seen thee now with the eye of the mind.

திருவாசகப் பாடல்கள் 'கோயில் திருப்பதிகம்' பகுதியிலே, மூன்றுவது தொடங்கி ஆறுவது முடியவாகும். எல்லிஸ் அச்சிட்ட தமிழ்ச் செய்யுட்கள் அடி பிறழாமல் இருந்தபோதும் சீர்பிரித்து எழுதப்பெறவில்லை; தவிர மெய்யெழுத்துக்களின் மேல் புள்ளிகள் இல்லை. இச் செய்யுட்களிலே சில இடங்களிலே பாட வேறுபாடுகளும் காணமுடிகின்றது. தனக்குக் கிடைத்த ஏட்டுச் சுவடிகளிலே இருந்த பாடல்களை அப்படியே அச்சிட்டார் எல்லிஸ் என்பது தெளிவு. சில பாட வேறுபாடுகளைக் கண்டு கொள்வோம்.

முதல் பாடலிலே, நான்காவது அடியானது,

'உரையுணர் விறந்துநின் றுணர்வதோ
[ருணர்வே'

எனப் பயிலப் பெறுகின்றது.

இரண்டாவது பாடலிலே,—இரண்டாவது அடியின் முதற்சீர் 'இணங்கிலி' எனவும், மூன்றுவது அடியிலே கடைசிச் சீர் 'வெளியே' எனவும், நான்காவது அடியானது,

'குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன முறையே'

எனப் பயின்று வருவது காண்கிறோம்.

நான்காவது பாடலிலே, நான்காவது அடியிலே, மூன்ருது சீர் 'களித்தனன்' எனப் பயில்கின்றோம். நிற்க,

எல்லிஸ் அவர்களின் திருக்குறள் மொழிபெயர்ப்பு நூல் 1813-இல் அச்சாகியது; ஆதலால், தமிழ்ச் செய்யுட்களை நன்கு பயின்று, நயமுணர்ந்து, ஆங்கிலத்திலே முதன் முதலாகப் பெயர்த்து வெளியிட்ட அருந்தமிழ்த் தொண்டர் எல்லிஸ் துரை என்பது வெளிப்படை. பின்னால் வரக்கூடிய இராபின்சன் (Robinson), துரு (Drew), போப் (Pope) ஆகியோர்க்கெல்லாம் முன்னோடியாகவும், முன்மாதிரியாகவும் அமைந்த பெருந்தகை எல்லிஸ் அவர்களே என்பது தெளிவு. போப் அவர்களின் திருவாசக மொழிபெயர்ப்பு 1900 ஆம் ஆண்டிலே வெளிவந்தது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதே!

# Gorky Centenary Celebrations Continue

—[IVAN IVANOV]—

★

"Maxim Gorky's Traditions and Contemporary Literature" was the theme of the agenda of the joint plenary meeting held by the Boards of the USSR and the RSFSR Unions of Writers in the city of Gorky (formerly Nizhnii Novgorod), the birth-place of the great proletarian writer, on June 21 and 22. Writers from all the Soviet Union's republics and foreign guests from 22 countries took part in this meeting.

In his opening speech, G. Markov, Secretary of the Board of the USSR Union of Writers, said :

"Paying homage to the work, life, exploits and genius of Maxim Gorky here, on the land where he was born and which nourished him with its life-giving sap, we always remember the great responsibility lying upon the Soviet writers and all progressive writers of the world. To be true to Gorky's traditions means to associate every word, thought and step with the great interests of the people."

I. Chugunov, Mayor of Gorky, addressed the meeting with a speech of welcome. B. Ryurikov, Secretary of the Board of the Union of Soviet Writers, made a report on the subject of "Maxim Gorky's traditions and contemporay literature." The speeches of foreign guests were warmly greeted by the meeting,

In a resolution, the meeting noted with satisfaction that Gorky's birth centenary had turned into an all-national honouring of the great writer and had found wide response abroad.

The meeting approved the activities of the republican, territorial and regional organizations of writers in popularizing Gorky's works, raising the role of writers in the Soviet people's consciousness, educating the young men of letters in the spirit of the militant traditions of Gorky and promoting effective contacts with progressive writers throughout the world in the interests of peace, progress and socialism.

## THE BIRTH-PLACE OF THE GREAT WRITER

The participants of the meeting spent three days as though with Maxim Gorky himself. Here, at his birth-place, on the old land of Nizhnii Novgorod, everything reminded them of Gorky, even the stones and the water of the famous Russian rivers, but, particularly, the people, his fellow-townsmen, the descendants of his literary characters.

In order deeply to absorb the Gorky atmosphere, Rasul Gamzatov, a Daghestan poet, accompanied by his family, made a trip on board a ship from Makhachkala, via Astrakhan, up the Volga river to the city of Gorky, visiting all the sites associated with the name of Gorky.

The big, picturesque city of Gorky had started preparations for the writers' meeting long before the sultry day of June 21, when this event, which for 72 hours was the centre of the city's life, began.

As soon as the guests of the city landed from the ship *N. V. Gogol*, they were given an unusual present - a handsomely got up issue of the newspaper *Burevestnik* specially prepared for this occasion by the regional organizations of writers and journalists.

On the eve of the plenary meeting, a musical festival was solemnly opened at the Kremlin concert hall to celebrate Gorky's birth centenary.

In the morning of June 21 the guests stepped on to the old land of Nizhnij Novgorod, now the city of Gorky. The first thing they did on their arrival was to place flowers on the pedestal of the great writer's monument on the square which bears his name. After the first session of plenary meeting its participants went on a sight-seeing trip around the city. Since many were in the city for the first time, they showed an especial interest in the sites associated with the great writer particularly, in the Kashirin House, where the writer had spent his childhood and youth.

As a museum, the Kashirin House is unique. It is almost incredible how the organizers of the museum have maintained the atmosphere of philistine family living Nizhnii Novgorod about a century ago.

## LITERARY SOIREE

A great number of lovers of literature gathered at an international literary soiree in the large concert hall of the Gorky Kremlin. Presided over by Sergei Mikhalkov, it was conducted in an atmosphere of sincere understanding between the speakers and the audience.

The audience was all ears, when Lev Kassil spoke of his encounters with Gorky, or Nikolai Rylenkov recited his poems, or Rasul Gamzatov delivered his witty speech. The floor was then taken by Luis Enrique Cendoya from Columbia, Dmitri Pavlychko who recited his temperamental poems, Radovan Zogovic from Yugoslavia, Peder Khuzangai, People's Poet of Chuvashia, Alexander Zharov, and Sergey Vassilyev, and the Gorky citizens Mikhail Shesterikov, Alexander Patreyev and Yuri Andrianov.

The appearance of the poet Rafael Alberti was greeted with cheering, specially when Mikhalkov announced that the authoress Maria Teresa Leon sitting in the first row was his wife.

The plenary meeting continued its work on June 22. In the foyer during the intervals, its participants continued their friendly talks, which they had started on board the *N. V. Gogol* on their way up the Volga.

Joaquin Gutierres, writer from Costa Rica, told me : "For us, fifty-year-olds, Gorky is not only a literary experience but a life experience as well. When we were young, he made an earthquake in our hearts, a "heartquake," if I may say so. He also made the same 'heartquake' in the young people who follow us and will continue to make it in those who will follow them."

## MEETING OF WRITERS AND READERS

On June 23 the writers went to different towns and villages of the Gorky region to talk with the readers. Thus, the plenary meeting of writers turned into a meeting of both writers and readers.

The readers, including workers, engineers, teachers and students, received their dear guests in a heart-felt, truly Nizhnii-Novgorod manner. The writers were guided by their sentiments in choosing the places to go to. For instance, Alfonsas Beljauskas went to Balakhna, because 26 years before, in the year of 1942, then an eighteen-year lad, he had donned a Red-Army uniform, picked up a gun and joined the 16th Lithuanian Rifle Division to liberate his native Lithuania from the fascists.

The writers' sojourn in Gorky's native land wound up with a big event held in the Palace of Culture of the Gorky Motor Works presided by Georgi Markov, Secretary of the Union of Soviet Writers. A large group of Soviet and foreign writers took part in the evening. The hosts also took the floor and not only in the capacity of readers but as authors as well. They also presented the guests with models of motor cars made at their factory.

The Gorky plenary meeting is over, but the Gorky Centenary goes on.

---

# ஸ்ரீ ராமகிருஷ்ண குடிலில் அனாதைச் சிறுவர்களுக்குப் புகலிடம்

திருச்சி, திருப்பராய்த்துறையிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண குடில் என்னும் ஸ்தாபனம் தமிழக அனாதைச் சிறுவர்களுக்கென்றே ஏற்பட்டுள்ள தர்ம ஸ்தாபனமாகும். ஷ அனாதைச் சிறுவர்களுக்காகவே இங்கு ஹைஸ்கூல் படிப்பு வரை பள்ளியும், படிப்பு முடிந்தபின் தொழிற் பயிற்சி பெற இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிடியூட்டும் நடத்தப்பட்டு வருகிறது. உணவு, உடை, இருப்பிடம், கல்வி, தொழிற் பயிற்சி முதலான யாவும் முற்றும் இலவசம்.

இங்கு இப்பொழுது சுமார் 300 மாணவர்கள் வரை புகலிடம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள். மேற்கொண்டும் சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு வருகிறோம். வருடம் பூராவும் எந்தச் சமயத்தில் அனாதைச் சிறுவர்கள் வந்தாலும் எடுத்துக்கொண்டுதானிருக்கிறோம். ஆனாலும், பள்ளியாண்டுப் பருவகாலமாகிய மே, ஜூன் மாதங்களில்தான் அதிகமான சிறுவர்கள் சேர நல்ல வாய்ப்பிருக்கிறது.

அப்படியிருந்தும் நாட்டில் ஆங்காங்கு கவனிப்பாரற்ற அனாதைச் சிறுவர்கள் ஏராளமான பேர் அவல நிலையில் திரிந்து வருவதாகவும், யாரும் முன் வந்து அவர்களை இத்தகைய ஸ்தாபனங்களில் சேர்த்துவிட முயற்சிக்காததால் அவர்களுடைய வாழ்க்கை பாழாகிறது என்றும் பலவகையாலும் கேள்விப்படுகிறோம்.

"தமிழகத்தில் தாய் தந்தை இருவருமேயில்லாத திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களே இல்லை" என்ற நிலையை ஏற்படுத்த முயற்சிக்கும் இலட்சியத்தில் குடில் சேவை செய்து வருகிறது. ஆகையால், தாய் தந்தை இருவருமேயில்லாத, திக்கற்ற நிலையிலுள்ள அனாதைச் சிறுவர்களை மட்டுமே (தாயோ, தந்தையோ யாரொருவர் இருந்தாலும் வேண்டாம்) 9 வயதுமுதல் 14 வயதுவரையுள்ளவர்களாகவும், அவர்களுடைய படிப்பு நிலை 3-வது வகுப்பிலிருந்து ஹைஸ்கூல் படிப்புவரை உள்ளவர்களாகவும் பார்த்து, இவர்களை தமிழகத்தில் யார் கண்டாலும் அத்தகைய சிறுவர்களைப்பற்றி முழு விவரங்களுடன் முதலில் இங்கு விண்ணப்பம் அனுப்பிவைத்தால், அதற்கான பாரம் வகையருக்கள் இங்கிருந்து அனுப்பிவைக்கப்படும் என்பதை அன்புடன் அறிவித்துக் கொள்ளுகிறோம்.

தலைவர்,
ஸ்ரீ ராமகிருஷ்ண குடில்,
திருப்பராய்த்துறை (அஞ்சல்)
திருச்சி மாவட்டம்.

---

# பூக்காரி

—[ முகவை வாசுகிநாதன் ]—

கூடை ஏந்தும் கையில் நல்ல
குண்டு மல்லிப் பந்தெடுத்துச்
சாடை காட்டிப் பூக்கொடுக்க வந்தனள் — அவள்
சார்ந்த பக்கம் நறுமணத்தைத் தந்தனள்.

விழியி ரண்டில் மைகுழைத்து
வீணை நாதக் குரலெடுத்து
கிளிவிருந்து வைக்க வீதி வந்தனள் — அவள்
கிழவருக்கும் கூடமையல் தந்தனள் !

அந்தி வானச் சிவப்பெடுத்து
அழகு நெற்றித் திலக மிட்டு
முந்தி வந்து மதிமுகத்தைக் காட்டினாள் — அவள்
முத்திறைத்த வாள்நினைப்பை ஊட்டினாள் !

கன்னி நோக்கும் காளை நோக்கும்
பின்னி நிற்கும் போக்கடுத்து
வன்ன மாலை நினைவை ஊட்ட வந்தனள் — அவள்
வரிசை மாலை தனையளிக்க முந்தினள் !

Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirappalli-2.